SRI LANKA

# இலங்கை கணக்கீட்டு தொழிநுட்பவியலாளர்கள் கழகம்

## மட்டம் III பரீட்சை – ஜூலை 2024

**(Level III Examination – July 2024)**

## பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

# (303) நிதிக் கட்டுப்பாடுகளும் கணக்காய்வும் (FCA)


**இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியாளர்கள் கழகம்**
இல, 640, வென். முறுத்தெட்டுவென ஆனந்த நாகிமி மாவத்தை,
நாரேஹன்பிட்டி, கொழும்பு - 05
தொ.பே - 011 2 559 669



**கல்வி மற்றும் பயிற்சி பிரிவின் வெளியீடு**

# இலங்கை கணக்கீட்டு தொழிநுட்பவியலாளர்கள் கழகம்
# மட்டம் III பரீட்சை – ஜுலை 2024
# (303) நிதிக் கட்டுப்பாடுகளும் கணக்காய்வும்
# பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

*(மொத்தம் 20 புள்ளிகள்)* **பகுதி - A**

## *வினா 01 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள் :*

முழு மதிப்பெண்களைப் பெற, கீழே கொடுக்கப்பட்ட காரணிகளில் ஏதாவது இரண்டு காரணிகளை விரிவாக விளக்கலாம்:

1. ஒரு சுயாதீனமான கணக்காய்வு என்பது நிதிநிலை அறிக்கைகளை ஆய்வு செய்து வழங்குகிறது, அவை பிழை அல்லது மோசடி மூலமான தவறான அறிக்கையிடலிருந்து விடுபடுவதை உறுதி செய்கிறது. அதன் மூலம் பங்குதாரர்கள் தவறான தகவல்களின் அடிப்படையில் முடிவெடுப்பதற்கான ஆபத்தை குறைக்கிறது அத்துடன் பங்குதாரர்களின் நலன் சார்ந்து முகாமைத்துவம் செயற்பட வழிவகுக்கிறது
2. கணக்காய்வானது நிறுவனத்தின் நலன் சார்ந்து இயக்குநர்கள் செயல்படுவதை உறுதிசெய்வதற்கான ஒரு வழியாக பங்குதாரர்களுக்கு இருக்கிறது.
3. கணக்காய்வின் முக்கிய நோக்கம், நிதிநிலை அறிக்கைகளை பயன்படுத்த உத்தேசித்துள்ள நபர்களின் நம்பிக்கையை மேம்படுத்துவதாகும்
4. ஒரு நிறுவனத்தின் நிதி அறிக்கையின் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்பு கூறலில் கணக்காய்வு முக்கிய பங்கு வகிக்கின்றது. நிதிநிலை அறிக்கைகளின் துல்லியம் மற்றும் முழுமையைச் சரிபார்ப்பதன் மூலம், பங்குதாரர்கள் நிறுவனத்தின் நிதிச் செயல்பாடு மற்றும் நிதிநிலையைப் பற்றிய தெளிவான மற்றும் உண்மையான நிலவரத்தை பெற்று கொள்வதை கணக்காய்வு உறுதி செய்கின்றது.

*(மொத்தம் 05 புள்ளிகள்)*

## *வினா 02 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள் :*

கீழே குறிப்பிடப்பட்ட இரு அபாய முகாமைத்துவ கருவிகளை விளக்குவதால் முழு மதிப்பெண்களைப் பெற முடியும்.

**1. சைபர் பாதுகாப்பு (Cyber Security)**

இது தொழில்நுட்பங்கள், செயல்முறைகள் மற்றும் நடைமுறைகளின் தொகுப்பாகும், இது வலையமைப்புகள், கணினிகள், திட்டங்கள் மற்றும் தரவுகளை சேதபடுத்தல் அல்லது அங்கீகரிக்கப்படாத அணுகலில் இருந்து பாதுகாக்க வடிவமைக்கப்பட்டுள்ளது.

### 2. கணினி நுண்ணறிவு (Artificial Intelligence)

இது ஒரு "அறிவியல் தொழில்நுட்பம்" ஆகும், இது மனித செயல்முறைகளான சிந்தித்தல் , கற்றுக்கொள்ளல் மற்றும் கணித்தல் போன்ற செயல்முறைகளை நீட்டித்து, அவற்றை வலையமைப்பில் உள்ள இயந்திரங்களில் சேர்க்கிறது.

### 3. அடிப்படை ஆபத்து காட்சிப்படுத்தும் நிரல்கள் (Basic Risk Visualization Programs)

தகவல் தொழில்நுட்பம் இடர் முகாமைத்துவத்தை எளிமைப்படுத்தி செலவுகளை குறைத்துள்ளது, குறிப்பாக மைக்ரோசாப்ட் எக்செல், பவர்பாய்ன்ட், மற்றும் ஷேர் பாய்ன்ட் போன்ற சாதனங்கள் மூலமாக, எந்த அளவிலான நிறுவனங்களிலும் இடர் கண்காணிப்பு மற்றும் அறிக்கைகளுக்கு பயன்படுத்தப்படுகிறது.

### 4. சமூக வலைத்தளம் (Social Media)

வணிகங்கள் இப்போது சமூக வலைத்தள கண்காணிப்பை ஒரு தகவல் தொழில்நுட்பம் சார்ந்த ஆபத்து முகாமைக் கருவியாகப் பயன்படுத்துகின்றன, இது வாடிக்கையாளர் சேவை மற்றும் தயாரிப்பு தரம் குறித்த நேரடி அறிவுறுத்தல்களை வழங்குகிறது. இந்த உடனடி கருத்துக்கள் உடனடியாக சிக்கல்களைத் தீர்க்க உதவுகிறது, இதன் மூலம் நிறுவன நன்மதிப்பு இழப்பு தடுக்கப்படுகிறது.

### 5. தரவு ஒருங்கிணைப்பு மற்றும் பகுப்பாய்வு (Data Integration and Analytics)

நிறுவனங்களில் பெரும்பாலும் ஆபத்து தரவுகளை கொண்ட பெரிய தரவுத்தொகுப்புகள் உள்ளன, இவை மின்னணு தரவு சேமிப்பு நிலையம் (EDW), பிக் டேட்டா மற்றும் வணிக நுண்ணறிவு (BI) செயலிகள் போன்ற தகவல் தொழில்நுட்பத்தால் இயக்கப்படும் கருவிகளைப் பயன்படுத்தி இடர் முகாமைத்துவத்தை மேலும் மேம்படுத்தலாம். இந்த தரவுப் பகுப்பாய்வு கருவிகள் இடர் முகாமைத்துவத்தை மேம்படுத்தி, துரிதமாக மோசடிகளை கண்டறிதல், பண மோசடி மற்றும் செயல்பாட்டு இடர் மேல் கட்டுப்பாட்டை ஏற்படுத்துகின்றன.

### 6. தரவு நுண்ணாய்வு (Data Mining)

தரவு நுண்ணாய்வு என்பது தகவல் தொழில்நுட்பத்தால் இயக்கப்படும் இடர் முகாமைத்துவ கருவியாகும், இது நிறுவனங்களுக்கு இயந்திரங்கள் தோல்வி அடைய முன்னராக எதிர்வு கூறலை வழங்க, மோசடிகளை கண்டறிய, மற்றும் நிறுவன லாபங்களை எதிர்வு கூற உதவுகிறது. முந்தைய தரவுகளின் போக்கு, வகைப்படுத்தல் மற்றும் தொடர்புகளை பகுப்பாய்வு செய்வதன் மூலம் எதிர்கால நிகழ்வுகளை பற்றி எதிர்வு கூறலை மேற்கொள்ள முடியும்.

### 7. பொதுவான தரவு (Open Data)

பொதுவான தரவு, குறிப்பிட்ட தரவுகளின் மட்டுப்படுத்தப்படாத வழங்கல் மற்றும் பயன்பாட்டை வழங்கும் ஒரு மூலமாக விளங்குகிறது. இன்றைக்கு, பொருளாதார நிலைகள் மற்றும் சந்தைகளின் நேரடி தரவுகள் பெரும்பாலான நிறுவனங்களுக்கு உடனடியாக

கிடைக்கின்றன, இது தீர்மானங்களை மேற்கொள்வதற்கு தேவையான தகவல்களை வழங்குகிறது.

*(மொத்தம் 05 புள்ளிகள்)*

## *வினா 03 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள் :*

***(a) COSO*** என்கின்ற உள்ளக கட்டுப்பாட்டு வேலைச்சட்டகத்திற்கு அமைவாக நம்பகமான நிதி அறிக்கையிடலின் நோக்கம் முகாமையானது நம்பகமான மற்றும் அக்கறையுடைய தரப்பினரின் தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் நிதி அறிக்கைகளைத் தயாரிப்பதனை உறுதி செய்வதற்காகும். இந்த நிதி அறிக்கைகள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படும் கணக்கீட்டு நெறிமுறைகள் (GAAP) மற்றும் இலங்கை கணக்கியல் நியமங்களுக்கு அமைவாக துல்லியமாகவும், நியாயமாகவும் தயாரிக்கப்பட வேண்டும். நிதி அறிக்கைகள் நம்பகமாக இருக்க வேண்டும், ஆனால் பயனாளர்கள் பொருளாதார முடிவெடுப்புக்கு தேவைப்படும் அனைத்து தகவல்களையும் உள்ளடக்க வேண்டிய அவசியமில்லை. அதற்கு பதிலாக, சட்ட, ஒழுங்கமைப்பு தேவைகளுக்கு ஏற்றவாறான சரியான மற்றும் நிலையான தகவல்களை வழங்க வேண்டும்.

*(03 புள்ளிகள்)*

***(b)*** கீழே உள்ளவற்றில் இரண்டு கூறுகளை குறிப்பிடுவது முழுப் மதிப்பெண்களை பெற அனுமதிக்கும்:

1. கட்டுப்பாட்டு சூழல் (Control Environment)
2. இடர் மதிப்பீடு (Risk Assessment)
3. கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் (Control Activities)
4. தகவல் மற்றும் தொடர்பாடல் (Information & Communication)
5. கண்காணித்தல் (Monitoring)

*(02 புள்ளிகள்)*

*(மொத்தம் 05 புள்ளிகள்)*

## *வினா 04 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள் :*

1. ஈடுபடுத்தல் நடவடிக்கையின் முன்னேற்றத்தை கண்காணித்தல்: மேற்பார்வை நடவடிக்கையின் கீழ் ஒவ்வொரு ஈடுபடுத்தல் நடவடிக்கையின் முன்னேற்றமும் கண்காணிக்கப் பட வேண்டும்.

2. ஈடுபடுத்தல் குழுவின் உறுப்பினர்களின் திறமை மற்றும் திறன்களை பரிசீலித்தல்: அவர்கள் தங்கள் பணிகளை செய்யக் கூடிய கணிசமான காலம் வழங்கப்பட்டிருக்கிறதா என்பதையும், அவர்களுக்கான கட்டளைகளை சரியாகப் புரிந்துகொள்கிறார்களா என்பதையும், திட்டமிட்டபடி வேலை மேற்கொள்ளப்படுகிறதா என்பதையும் பரிசீலிக்க வேண்டும்.

3. ஈடுபடுத்தல் நடவடிக்கையின் போது எழும் முக்கிய விடயங்களை பரிசீலித்து, அவற்றின் முக்கியத்துவத்தை ஆராய்ந்து , திட்டமிட்ட முறையை சரியான முறையில் மாற்றம் செய்ய வேண்டும்.

4. ஈடுபடுத்தல் நடவடிக்கையின் போது நிபுணத்துவ ஆலோசனை தேவைப்படும் விடயங்களை கண்டறிந்து அனுபவமிக்க குழுவினரின் கவனத்திற்கு கொண்டு வருதல்

*(மொத்தம் 05 புள்ளிகள்)*

*பகுதி A முடிவு*

## வினா 05 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள் :

**(a)** கீழே உள்ள இரண்டு கட்டுப்பாட்டு செயல்பாடுகளை எடுத்துக்கூறி, ஒரு உதாரணம் விளக்கினால் முழு மதிப்பெண்களைப் பெறலாம்

| | கட்டுப்பாட்டு நடவடிக்கை | விளக்கம் | உதாரணம் |
|---|---|---|---|
| 1. | வேலைகளை பகிர்ந்தளித்தல் (Segregation of Duties) | தவறுகள் அல்லது மோசடிகள் ஏற்படும் இடரை குறைக்க பணிகள் வேறு வேறு ஊழியர்களுக்கு பகிர்ந்தளிக்கப்படுகின்றன. | • காசு அல்லது காசோலைகள் பெறுதல், வைப்புச் செய்தல் மற்றும் வைப்புக்களை சீராக்கம் செய்தல் ஆகிய பொறுப்புகள் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும்.<br>• வழங்குநர்களுக்கான கட்டண செயல்முறையில், விலைப்பட்டியல் சரி பார்க்க , கணக்கு புத்தகத்தில் பதிவு செய்ய, கட்டணம் செலுத்த வெவ்வேறு ஊழியர்கள் இருக்க வேண்டும். |
| 2. | பௌதீக ரீதியான கட்டுப்பாடு (Physical Controls) | அங்கீகரிக்கப்படாத அணுகலைத் தடுக்கும் அல்லது கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் | • பூட்டுகள், பாதுகாப்பு அடையாளங்கள், பயோமெட்ரிக் ஸ்கேனர்கள், அல்லது கண்காணிப்பு கேமராக்கள் போன்ற கட்டுப்பாடுகளைப் பயன்படுத்துதல்.<br>• அழைப்புகள், சிசிடிவி கேமராக்கள் மற்றும் பாதுகாப்பு பணியாளர்கள் போன்ற பாதுகாப்பு நடவடிக்கைகள் உடைமைகளை கண்காணிக்கவும் பாதுகாக்கவும் பயன்படுகின்றன. |
| 3. | அங்கீகாரம் மற்றும் ஒப்புதல் (Authorization and Approval) | செயல்களை செயல்படுத்துவதற்கு முன்பு அவற்றுக்கு ஒப்புதல் பெறுதல். | • கொள்முதல் முகாமையாளர் கொள்முதல் நிர்வாகி தயாரித்த கொள்முதல் ஆணையை வழங்குநருக்கு அனுப்புவதற்கு முன் ஒப்புதல் அளிக்கிறார்.<br>• விற்பனைப் பொருளின் விலைகளை மாற்றுவது, கழிவுகள் அல்லது விற்பனை மேம்படுத்தல் நடவடிக்கை போன்றன |

SRI LANKA

| | | | |
|---|---|---|---|
| | | | சம்பந்தப்பட்ட முகாமையாளர் அல்லது சிரேஷ்ட ஊழியர் ஒப்புதல் அளிக்க வேண்டும்.<br>• காசு திருப்பி வழங்குதல் அல்லது தள்ளுபடிகள் செய்யும் போது மேற்பார்வையாளர் ஒப்புதல் தேவை.<br>• கடையின் பணி மாற்றல் திட்டங்கள் களஞ்சிய முகாமையாளர் மூலம் ஒப்புதல் பெற வேண்டும், இதனால் பணியாளர்களின் அளவு சரியாக இருக்கவும், தேவையற்ற அதிக வேலை நேரம் மற்றும் சம்பள குளறுபடிகள் தவிர்க்கப்படலாம். |
| 4. | முகாமை கட்டுப்பாடு (Management Controls) | இவை பொதுவாக மேற்பார்வை, கண்காணிப்பு மற்றும் நிறுவன கொள்கைகளை அமுலாக்குதல் ஆகும், இது ஊழியர்கள் தொழிற்படுவதற்கான அடிப்படை சட்டகம் ஆகும். | • வரவு செலவுத் திட்ட கட்டுப்பாடுகள்<br>• செயல்திறன் மதிப்பீடுகள்<br>• வழிமுறை செயல்பாட்டுத் தரநிலைகள் (SOPs) உருவாக்குதல். |
| 5. | மேற்பார்வை கட்டுப்பாடு (Supervision Controls)<br>. | உள்ளக கட்டுப்பாடு ஆனது ஊழியர்கள் நிறுவனத்தின் கொள்கைகள், நடைமுறைகள் மற்றும் குறிக்கோள்களுடன் ஒத்துப்போகிறதா எனக் கண்காணிக்கிறது | • துறையின் மேலாளர்கள் சரியான அளவிலான கையிருப்புகள் இருப்பதை உறுதிப்படுத்தும் வகையில் சரக்குகள் முறைப்படி பேணப்படுகிறதா முறைப்படி காட்சிப்படுத்தப்பட்டுள்ளதா, காலவதித் திகதி கண்காணிக்கப்படுகிறதா என மேற்பார்வை செய்கின்றனர்.<br>• மேற்பார்வையாளர்கள் பணியாளர் வருகை மற்றும் நேரம் தவறாமை மற்றும் ஒதுக்கப்பட்ட வேலைகளை செய்கிறார்களா என கண்காணிக்கின்றனர். |

aat SRI LANKA

| | | | |
|---|---|---|---|
| | | | • கடை அல்லது துறையின் மேலாளர்கள், தினசரி நடவடிக்கைகளை கண்காணிக்கின்றனர் அதாவது பொருட் காட்சிப்படுத்தல் , களஞ்சிய தூய்மை என்பன நிறுவன நியமங்களுக்கு ஏற்ப உள்ளதா என கண்காணிக்கின்றனர் |
| 6. | நிறுவன கட்டுப்பாடு (Organizational Controls) | நிறுவன அமைப்பு மூலம் கட்டுப்பாடுகள் வழங்கப்படுகின்றன அவையாவன அறிக்கையிடல் வரிசை , அதிகார வரிசை. இதன் மூலம் ஒவ்வொரு நிலைமையிலும் முகாமையாளர்கள் பொறுப்புகளையும் அதிகாரங்களையும் பெறுகின்றனர். | • ஒவ்வொரு பதவிக்குமான வகிபாகங்களும் பொறுப்புக்களும் தெளிவாக வரையறுக்கப்பட்டுள்ள ஒரு நிறுவன ஒழுங்கமைப்பு உள்ளது. அவையாவன களஞ்சிய முகாமையாளர்கள், துறை முகாமையாளர்கள், காசாளர்ர்கள், இருப்பு மேற்பார்வையாளர்கள் மற்றும் வாடிக்கையாளர் சேவை பிரதிநிதிகள் ஆகியோருக்கான வேறுபட்ட வகிபாகங்கள் உள்ளன. |
| 7. | கணிப்பீடு மற்றும் கணக்கீட்டு கட்டுப்பாடு (Arithmetical and Accounting Controls) . | பரிவர்த்தனைகளை சரியாகவும் துல்லியமாகவும் பதிவு செய்து செயலாக்கம் செய்யப்பட்டுள்ளதா என சரிபார்க்கும் செயல்பாடு | • சீராக்கல் செயல்பாடுகள்<br>• குறுக்கு பரிசோதனை - தனித்தனி தொகைகளின் கூட்டுத்தொகையை மொத்த கணக்குடன் சரிபார்த்தல். • பரீட்சை மீதியைத் தயாரித்தல்<br>• கட்டுப்பாட்டு கணக்குகள். |
| 8. | பணியாளர் கட்டுப்பாடு (Personnel Controls) | பணியாளர்களின் தேர்வு, பயிற்சி மற்றும் அவர்களின் தகுதிகளில் கவனம் செலுத்துதல். | • திறமையான மற்றும் பயிற்சி பெற்ற ஊழியர்களை உற்பத்திப் பகுதிகளில் ஈடுபடுத்துவதை உறுதிப்படுத்துதல். |

*(05 புள்ளிகள்)*

**(b)**

கணக்காய்வாளர் உள்ளகக் கட்டுப்பாடுகளை அமுல்படுத்தியிருந்தாலும், பிழைகள் மற்றும் மோசடிகளை முற்றிலும் தவிர்க்க முடியாது. அதற்கான சில காரணங்கள் பின்வருமாறு:

- உள்ளகக் கட்டுப்பாட்டின் செயல்திறன், நிறுவனத்தின் இடர் விழிப்புணர்வு கலாச்சாரத்தின் பலத்தில் தங்கி உள்ளது. இயக்குநர்கள் மற்றும் சிரேஷ்ட முகாமையினர் இடர் கட்டுப்பாட்டில் வலுவான தலைமைதத்துவத்தை வழங்கவில்லை என்றால், உள்ளக கட்டுப்பாட்டு முறைமை சரியான விதத்தில் தொழிற்படாது.
- உள்ளகக் கட்டுப்பாடுகள் செயற்பாட்டு ஆபத்துக்களை குறைக்கலாம், ஆனால் செயற்பாட்டு தோல்விகள் மற்றும் பிழைகளைத் தவிர்க்க முடியாது.
- உள்ளகக் கட்டுப்பாடுகள் இருந்தாலும் கூட மனித பிழைகள் தவிர்க்க முடியாதவை.
- சில கட்டுப்பாடுகள் சரியான முறையில் அமுல்படுத்தப்படாமையால் அவை எதிர்பார்த்தபடி தொழிற்படாமல் இருக்கலாம்
- மாற்றமடையும் வணிக சூழலால் செயற்பாட்டு ஆபத்துகள் எப்போதும் மாற்றத்திற்கு உட்பட்டவை, அதனால் புதிய ஆபத்துகள் உருவாகின்றன, இதனால் ஏற்கனவே இருந்த கட்டுப்பாடுகள் புதிய இடரை எதிர்கொள்ள போதுமானதாக இருக்காது.
- உள்ளகக் கட்டுப்பாடுகளை வடிவமைப்பது மற்றும் செயல்படுத்துவது செலவானது. சில சந்தர்ப்பங்களில் கட்டுப்பாட்டில் இருந்து கிடைக்கும் கூடுதல் பயன்கள் செலவுக்கு சமமாக இருக்காது.
- இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட ஊழியர்கள் ஒன்றிணைந்து கட்டுப்பாட்டை மீறலாம், குறிப்பாக பொறுப்புகள் பிரிக்கப்படும் போது ஒவ்வொரு கடமையைச் செய்பவர்களும் கூட்டுச் சேர்ந்தால் கட்டுப்பாடு மீறப்படும்.
- முகாமை தங்களது அதிகாரத்தை பயன்படுத்தி கட்டுப்பாடுகளை மீறலாம்.

***(05 புள்ளிகள்)***

***(மொத்தம் 10 புள்ளிகள்)***

## *வினா 06 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள் :*

**(a)**

**(b)**

| | பலவீனங்கள் | பரிந்துரை |
|---|---|---|
| 01. | அனைத்து கொடுப்பனவுகளும் கணக்கு உதவியாளர் மூலம் கையாளப்படுகின்றன மற்றும் சில்லறை காசு நிதியையும் பராமரிக்கிறார். | கொடுப்பனவுகளும் சில்லறை காசுக் கொடுப்பனவுகளும் இருவர் மூலம் கையாளப்பட வேண்டும். (பொறுப்புகளைப் பகிர்ந்தளித்தல்) |
| 02 | அனைத்து காசுப் பெறுவனவுகளும் வங்கியில் வைப்பிலிடப்படவில்லை. நாளந்த காசுப் பெறுவனவுகளில் 10,000 | நாளந்த காசுப் பெறுவனவுகள் முழுமையாக வங்கியில் வைப்பில் இடப்பட வேண்டும், நாளந்த பணக் |

| | | |
|---|---|---|
| | ரூபாவை தினசரி செலவுகளுக்காக வைத்துக் கொண்டு மீதியை வங்கியில் வைப்பில் இடுகின்றனர். | கொடுப்பனவுகளை சில்லறை காசுக்கு பொறுப்பானவர் கையாள வேண்டும். |
| 03 | முறையான அங்கீகாரம் இன்றி, மேலதிக வேலை நேர கொடுப்பனவுகள் கணக்கு நிர்வாகியால் கணிப்பிடப்பட்டு வங்கியில் நேரடியாக ஊழியர்களின் கணக்கிற்கு வைப்பு செய்யப்படுகின்றன. | மேலதிக வேலை நேர கணிப்பீடுகள் உயர் அதிகாரிகளால் பரிசீலிக்கப்பட்டு ஒப்புதல் அளிக்கப்பட வேண்டும், மற்றும் பணப் பரிமாற்றங்களை வேறு ஊழியர் செய்ய வேண்டும். |
| 04 | விற்பனை விலைப் பட்டியல் விவரங்களில் பிழைகள் அல்லது இழப்பு காரணமாக அடிக்கடி பிணக்குகள் ஏற்படுகின்றன. இது பதிவுகளில் குறைபாடுகள் உள்ளதை காட்டுகிறது. | விற்பனை விலைப் பட்டியல் இலக்க தொடர்ச்சியை சரிபார்க்கும் பொருத்தமான செயலி/ கட்டுப்பாடுகள் உருவாக்கப்பட வேண்டும். |
| 05 | கணக்கு உதவியாளர் உரிய அனுமதி இல்லாமல் கடன்பட்டோரின் அறிக்கையைத் தயாரிக்கிறார். | கணக்காளர் வேலையாக இருந்தால், மற்ற அலுவலர் கடன்பட்டோரின் பதிவுகளை சரி பார்த்து ஒப்புதல் அளிக்க வேண்டும், மேலும் அனைத்து மாற்றங்களும் சரியாக அங்கீகரிக்கப்பட வேண்டும். |
| 06 | பௌதிக ரீதியான சரக்கிருப்பிற்கும் கணக்கு ரீதியான சரக்கிருப்பிற்கும் இடையில் குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் காணப்படுகின்றன. | சுயாதீன நபர் அவ்வப்போது சரக்கு கணக்குகளை பௌதிக ரீதியான சரக்கிருப்புடன் சரிபார்க்க வேண்டும். |
| 07 | சில சரக்கிருப்பு தரவுகள் பிரதான கோப்பிலிருந்து நீக்கப்பட்டுள்ளன | சரக்கு முறைமையில் மாற்றங்கள் மேற்கொள்ளும் போது உயர் மட்ட அதிகாரிகளின் கடவுச்சொல் தேவைப்படும் வகையில் பாதுகாப்பு முறைமை காணப்பட வேண்டும். |
| 08 | சரக்கு முறைமையைச் செயல்படுத்துவதற்கு முன் எந்தவிதப் பயிற்சியும் வழங்கப்படவில்லை | சரக்கு முறைமையை செயல்படுத்துவது சம்பந்தமான பயிற்சி வழங்கப்பட வேண்டும |

*(03 புள்ளிகள்)*

aat SRI LANKA

**(c) கீழே கொடுக்கப்பட்டவைகளிலிருந்து தகவல் தொடர்பு தொழில்நுட்பத்தின் (IT) இரு பொது கட்டுப்பாடுகளை அடையாளம் காட்டுவது முழு மதிப்பெண்களைப் பெற அனுமதிக்கும்.**

| பொது கட்டுப்பாடுகள் | உதாரணம் |
|---|---|
| ' கணினி பயன்பாட்டை மேம்படுத்தல் | • முறைமை வடிவமைப்பு, நிரலாக்கம் மற்றும் ஆவணப்படுத்தல் குறித்து நிலையான நடைமுறைகள்<br>• கணினி பயனர்கள் மற்றும் முகாமையின் அங்கீகாரம்<br>• பொறுப்புகளைப் பகிர்ந்தளிப்பது, இதனால் வடிவமைப்புக்கு பொறுப்பானவர்கள் பரிசோதனைக்கு பொறுப்பாக இருக்க மாட்டார்கள்<br>• புதிய நடைமுறைகள் தொடர்பாக ஊழியர்களுக்கு பயிற்சி வழங்கல் மற்றும் தேவையான ஆவணங்கள் வழங்கல் |
| மறைமுகமான/அங்கீகரிக்கப்படாத மாற்றங்களைத் தடுத்தல் அல்லது கண்டறிதல் | • பொறுப்புகளைப் பகிர்ந்தளித்தல்<br>• கணினி செயல்பாட்டு ஊழியர்கள் மட்டும் அணுக கூடிய வகையில், கடவுச்சொல் பாதுகாப்பு<br>• மையக் கணினிக்கு அணுகலைத் தடுக்க, பூட்டிய கதவுகள்<br>• மென்பொருள் வைரஸ் சோதனை, வைரஸ் எதிர்ப்பு மென்பொருளின் பயன்பாடு மற்றும் அங்கீகரிக்கப்படாத மென்பொருட்கள் அல்லது கோப்புகளைத் தடுக்கும் கொள்கை<br>• மென்பொருள் காப்புப்பிரதிகள் (BACKUP) எடுக்கப்பட்டு வேறு இடங்களில் சேமிக்கப்படுகின்றன |
| மாற்றங்களை சோதனை செய்தல் மற்றும் ஆவணப்படுத்தல் | • முழுமையான பரிசோதனை நடைமுறைகள்<br>• ஆவணப்படுத்தல் நியமங்கள்<br>• மாற்றங்களுக்கான கணினி பயன்படுத்துனர்கள் மற்றும் முகாமையின் அனுமதி<br>• பயன்படுத்தப்படும் மென்பொருளுக்கான ஊழியர்களுக்கு பயிற்சி |
| தரவுக் கோப்புகளை அனுமதி இல்லாமல் மாற்றம் செய்வதை தடுக்கும் கட்டுப்பாடுகள் | • தொலைவழி உபகரணங்களின் பௌதிக ரீதியான பாதுகாப்பு<br>• அங்கீகரிக்கப்பட்ட நபர்களுக்கு மட்டுமே வரையறுக்கப்பட்ட அணுகல்<br>• பாதுகாப்பு சுவர்கள் (Firewalls)<br>• கடவுச்சொற்கள் போன்ற பயனர் அடையாளக் கட்டுப்பாடுகள் |

| | |
|---|---|
| | • தரவின் குறியாக்கம் (Encryption) |
| நடவடிக்கைகள் தொடர்ச்சியாக நடைபெறுவதை உறுதி செய்யும் கட்டுப்பாடுகள் | •மென்பொருள் மற்றும் தரவுக்கோப்புகளின் இன்னொரு பிரதியை வெளியிடங்களில் சேமித்தல்<br>• சாதனங்களைத் தீ மற்றும் பிற ஆபத்துகளிலிருந்து பாதுகாப்பது<br>• பமின் ஆதாரத்திற்கான பிரதி உபகரணம்<br>• ஆபத்து மீட்பு நடைமுறைகள் (Disaster Recovery Procedures)<br>• மீட்பு வசதிகளுக்கான வாய்ப்புக்கள் - பராமரிப்பு ஒப்பந்தங்கள் மற்றும் காப்பீடு |

***(04 புள்ளிகள்)***

***(மொத்தம் 10 புள்ளிகள்)***

## *வினா 07 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள் :*

**(a)**

1. தகுதி வாய்ந்தவர்களை தேர்வு செய்வதை உறுதிப்படுத்துதல்: தகுதி இழக்கக் கூடிய (disqualified) வாய்ப்பு உள்ளதா என பரிசீலிக்கவும்.

2. தற்போது உள்ள வளங்கள் போதுமானவையாக உள்ளதா என்பதை உறுதிப்படுத்துதல்: இயலுமான நேரம், ஊழியர்கள் மற்றும் தொழில்நுட்ப நிபுணத்துவம் ஆகியவற்றை பரிசீலிக்கவும்.

3. நிறுவனம் பற்றிய குறிப்புக்களை பெறுதல்: இயக்குநர்கள் தனிப்பட்ட முறையில் அறியப்படாவிட்டால் சுயாதீனமாக விசாரணைகள் செய்யவும்.

4. தற்போதைய கணக்காய்வாளர்களுடன் தொடர்பு கொள்ளுதல்: மாற்றத்திற்கான காரணங்கள் அல்லது சூழ்நிலைகளை புதிய கணக்காய்வாளர்கள் அறிய வேண்டியது குறித்துப் பரிசீலிக்கவும், இதனை மரியாதை கருதியும் செய்யவும்.

5. ஏற்றுக்கொள்வதனால், அடிப்படைக் கொள்கைகளைப் பின்பற்றுவதில், குறிப்பாக சுயாதீனத்துடன் தொடர்புடைய ஏதாவது அச்சுறுத்தல்களை ஏற்படுமா என்பதைக் கண்டறிதல்.

6. அச்சுறுத்தல்களின் அளவை மதிப்பீடு செய்து, அவற்றை அகற்ற அல்லது ஏற்றுக்கொள்ளக்கூடிய மட்டத்திற்கு குறைக்க, தேவைப்பட்டால் பாதுகாப்புகளை (safeguards) பயன்படுத்தவும்.

***(04 புள்ளிகள்)***

**(b)**

1. குடும்ப மற்றும் தனிப்பட்ட உறவினால் ஏற்படும் அச்சுறுத்தல்

கணக்காய்வாளாரின் நெருங்கிய குடும்ப உறுப்பினர், வாடிக்கையாளரின் நிறுவனத்தில் முக்கியமான செல்வாக்கு செலுத்த கூடிய ஊழியராக இருக்கும் சந்தர்ப்பத்தில் கணக்காய்வாளாரின் சுயாதீனத்துக்கு அச்சுறுத்தல் ஏற்படும், வாடிக்கையாளரின் இயக்குநர் அல்லது அதிகாரியாக உள்ள நபரின் குடும்ப உறுப்பினர் ஈடுபடுத்தல் குழுவின் ஒரு உறுப்பினர் ஆக இருப்பின் பழக்கம் காரணமான அச்சுறுத்தல் ஏற்படும். எனவே, பெரேரா சுயாதீனமாக இல்லாமல், அந்த வாடிக்கையாளரின் ஈடுபடுத்தல் குழுவில் இருக்கக்கூடாது.

2. வணிக உறவு மற்றும் சுயநல அச்சுறுத்தல்

கணக்காய்வு குழுவின் உறுப்பினர், வாடிக்கையாளருடன் நெருங்கிய வணிக உறவு வைத்திருந்தால், அது சுயாதீனத்துக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தும். எனவே, சில்வா சுயாதீனமாக இல்லாமல், அந்த வாடிக்கையாளரின் கணக்காய்வு குழுவில் இருக்கக்கூடாது.

3. கடன் , உத்தரவாதம் மற்றும் சுயநல அச்சுறுத்தல்

சாதாரண கடன் வழங்கல் நடைமுறைகள், நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகளின் கீழ் கடன் வழங்கப்படவில்லை என்றால், சுயநல அச்சுறுத்தல் உருவாகும். இந்த சூழ்நிலை, நிறுவனத்திற்கு அந்த கடன் முக்கியத்துவம் வாய்ந்தது என்பதைக் காட்டுகிறது. எனவே, இயலுமான பாதுகாப்பு நடவடிக்கைகள் அமுல்படுத்தப்பட வேண்டும்.

*(06 புள்ளிகள்)*

*(மொத்தம் 10 புள்ளிகள்)*

*பகுதி **B** முடிவு*

aat SRI LANKA

## *வினா 08 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்*

**(a)** கீழே உள்ளவற்றில் மூன்று விடயங்களை விளக்கினால் முழு மதிப்பெண்களைப் பெறலாம்

உறுதிப்பாட்டு ஈடுபடுத்தலின் கூறுகள்

1. மூன்று தரப்பினரின் உறவு

மூன்று தரப்பினர்கள்:

தகவலை பயன்படுத்த உத்தேசித்துள்ள தரப்பினர்

கணக்காய்வாளர்

தகவலை வழங்கும் நபர் (பொறுப்பு நபர்)

2. கருப் பொருள்

இது மதிப்பீடு செய்ய வேண்டிய தரவாகும். இது பொறுப்புடைய நபர்களால் தயாரிக்கப்படுகிறது. இது நிதி சார்ந்த அல்லது நிதி சாரா செயல்திறன், செயல்முறை அல்லது நடத்தை சார்ந்த எதுவாகவும் இருக்கலாம்.

3. அளவுகோல்

கருத்தை கூறுவதற்கு கருப்பொருள் இவற்றின் அடிப்படையில் மதிப்பீடு செய்யப்படும். இந்த அளவுகோல்கள் கருப் பொருளின் தன்மையின் அடிப்படையில் மாறுபடும்.

4. சான்று

வெளிப்படுத்தப்படுகின்ற உறுதிப்பாட்டை ஆதரிக்கக்கூடிய போதுமான மற்றும் பொருத்தமான சான்றுகள் சேகரிக்கப்பட வேண்டும்.

5. உறுதிப்படுத்தல் அறிக்கை

கணக்காய்வாளர் தனது முடிவு அல்லது கருத்தை உறுதிப்படுத்தல் அறிக்கையில் தகவலை பயன்படுத்த உத்தேசித்துள்ள தரப்பினருக்கு வழங்குவார்.

***(06 புள்ளிகள்)***

**(b)** கீழே தரப்பட்டவற்றில் நான்கு விடயங்கயை குறிப்பிட்டால் முழு மதிப்பெண்களைப் பெறலாம்:

ஒப்பந்தத்தின் விதிமுறைகளை திருத்துவதற்கோ அல்லது நிறுவனத்திற்கு தற்போதைய விதிமுறைகளை நினைவூட்டுவதற்கோ பின்வரும் காரணிகள் தகுந்ததாக இருக்கக்கூடும்.

- நிறுவனம் கணக்காய்வின் நோக்கம் மற்றும் பரப்பை தவறாக புரிந்து கொண்டதைச் சுட்டிக்காட்டும் ஏதும் அறிகுறிகள்
- கணக்காய்வு ஒப்பந்தத்தின் ஏதும் திருத்தப்பட்ட அல்லது விசேட விதிமுறைகள்
- சமீபத்திய உரிமையாளரின் மாற்றம் அல்லது முகாமையின் மாற்றம்
- நிறுவனத்தின் வணிகத்தின் தன்மை அல்லது வணிகஅளவில் முக்கியமான மாற்றம்
- சட்டம் அல்லது ஒழுங்குவிதிமுறைகளில் மாற்றம்
- நிதி அறிக்கையிடலி மாற்றம்
- பிற அறிக்கையிடும் தேவைகளில் மாற்றம்

***(04 புள்ளிகள்)***

**(c)** கீழே தரப்பட்டவற்றில் நான்கு விடயங்கயை குறிப்பிட்டால் முழு மதிப்பெண்களைப் பெறலாம்:

1. நிதி அறிக்கைகள் மோசடியின் காரணமாக தவறாகத் தயாரிக்கப்படக்கூடும் என்ற முகாமையின் இடர் மதிப்பீடு
2. மோசடியின் ஆபத்தை அடையாளம் கண்டு அதற்குப் பதிலளிக்கும் முகாமையின் செயற்பாடு
3. நிதி அறிக்கை கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளர் தங்களுடைய பொறுப்புகளை முகாமை குழுவுக்கு தெரிவிக்க வேண்டும்
4. திட்டமிட்டுள்ள கணக்காய்வுப் பரப்பு மற்றும் நேரம் தொடர்பான ஒரு முழுமையான கண்ணோட்டத்தை கணக்காய்வாளர் தெரிவிக்க வேண்டும்
5. கணக்காய்வில் ஏற்படும் முக்கியமான கண்டுபிடிப்புகள் மற்றும் பிற விவரங்கள் ஏதேனும் இருந்தால், கணக்காய்வாளர் முகாமைக்கு தெரிவிக்க வேண்டும்
6. கணக்கியல் கொள்கைகளின் தெரிவு மற்றும் பயன்பாடு பொருத்தமானதா என்பதை கணக்காய்வாளர் மதிப்பீடு செய்ய வேண்டும்
7. SPLC மற்றும் Rose PLC யின் கணக்காய்வாளர் சுயாதீன (Independence) மதிப்பீடு
8. உள்ளகக் கட்டுப்பாட்டில் அடையாளம் காணப்பட்ட குறைபாடுகளை கணக்காய்வாளர் முகாமைக்கு தெரிவிக்க வேண்டும்
9. சீராக்கம் அல்லது வெளிப்படுத்தல் தேவைப்படும் நிதியாண்டுக்கு பின்னரான அனைத்து நிகழ்வுகளும் சீராக்கப்பட்டதா அல்லது வெளிப்படுத்தப்பட்டதா என்பதை கணக்காய்வாளர் உறுதி செய்ய வேண்டும்
10. நிதி அறிக்கைகளுக்கு பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய விடயங்களான சட்டம், விதிமுறைகள் மற்றும் ஒப்பந்த உடன்படிக்கைகள் போன்றவை பின்பற்றப்படாமல் இருப்பவற்றை கணக்காய்வாளர் மதிப்பீடு செய்ய வேண்டும்

***(05 புள்ளிகள்)***

**(d)**

பொருண்மை மதிப்பீடு கணக்காய்வாளருக்கு பின்வரும் வகையில் உதவும்

- பிறழ் கூற்றுக்கான இடரை அடையாளம் கண்டு மதிப்பீடு செய்ய

- மேலதிக கணக்காய்வு செயல்முறைகளின் தன்மை, நேரம், மற்றும் பரப்பெல்லையை தீர்மானிக்க
- கணக்காய்வு செயல்திறன் மற்றும் செயலாக்கத்தை மேம்படுத்த தேவையான கணக்காய்வு பணியின் அளவை தீர்மானிக்க
- பொதுவாக முக்கியமான கூறுகளுக்கு மட்டுமே பொருந்தும் கணக்கியல் நியமங்கள் பயன்படுத்தப்படுமா என்பதை தீர்மானிக்க
- கணக்காய்வின் போது திருத்தப்படாத தவறுகளை மதிப்பீடு செய்ய
- திருத்தப்பட்ட அபிப்பிராயத்துக்கு வழிவகுக்கும் தவறுகளின் நிலையை மதிப்பீடு செய்ய

***(04 புள்ளிகள்)***

**(e)**

திருத்தப்படாத தவறுகள் தனித்தனியாகவோ அல்லது கூட்டாகவோ கணக்கில் கொள்ளப்படும் அளவிற்கு முக்கியமானதா என்பதை கணக்காய்வாளர் தீர்மானிக்க வேண்டும். இந்தத் தீர்மானத்தை எடுக்கும்போது, தவறுகளின் அளவு, தன்மை மற்றும் முந்தைய காலங்களில் திருத்தப்படாத தவறுகளின் தாக்கத்தை, தொடர்புடைய பரிவர்த்தனைகள், கணக்கு மீதிகள் அல்லது வெளிப்படுத்தல்கள் மற்றும் நிதி அறிக்கைமீதான தாக்கத்தையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

கணக்காய்வின் போது அடையாளம் காணப்பட்ட தவறுகளை நாம் மதிப்பீடு செய்யும்போது:
தகவல் முறைமையில் உள்ள இருப்பு மற்றும் பௌதிக ரீதியான இருப்புக்கு இடையேயான ரூ. 997,000/- வேறுபாடு நிறுவனத்தின் லாபத்தை பாதிக்கிறது. காரணம், தகவல் முறைமையில் உள்ள இருப்பு, பௌதிக ரீதியான இருப்பு மதிப்பை விட அதிகமாக உள்ளது, தகவல் முறைமையில் உள்ள இருப்பே கணக்குகளுடன் இணைக்கப்பட்டுள்ளது . ஆகவே, நிறுவனத்தின் லாபம் ரூ. 997,000/- மூலம் அதிகமாக காட்டப்பட்டுள்ளது. ஆனால் தனித்தனியாக பார்க்கும் போது இது ஒரு முக்கியமான பிறழ் கூற்று இல்லை.

07 விற்பனை பட்டியலில் ஏற்பட்ட ரூ. 334,000/- மதிப்புள்ள தவறுகளும் தனித்தனியாக பார்க்கும் போது இது ஒரு முக்கியமான பிறழ் கூற்று இல்லை.

பெறுமான தேய்வு வீதத்தை தவறாகப் பயன்படுத்தியதை முகாமை ஏற்றுக் கொண்டது, மேலும் தேவையான சீரமைப்பைச் செய்ய ஒப்புக்கொண்டுள்ளது. இதனால் முந்தைய ஆண்டிற்கான ரூ. 367,000/- மற்றும் தற்போதைய ஆண்டிற்கான ரூ. 24,000/- முறையே உரிமை மாற்ற கூற்றின் ஆரம்ப நிலுவைக்கு மற்றும் தற்போதைய ஆண்டின் இலாப நட்ட கணக்கிலும் சீராக்கம் செய்யப்படும்.

நிறுவனத்தின் பொருண்மை மதிப்பீடு ரூ. 1,250,000/- ஆகக் கொடுக்கப்பட்டுள்ளது, மேலே குறிப்பிடப்பட்ட விவரங்களான கையிருப்பில் ஏற்பட்ட வேறுபாடுகள் மற்றும் விற்பனை

பட்டியல்களின் விடுபடுதல் காரணமாக S PLC யின் நிதி அறிக்கைகளில் மொத்தமாக ரூ. 1,331,000/- (ரூ. 997,000/- + ரூ. 334,000/-) முக்கியமான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

கணக்காய்வாளர், திருத்தப்படாத பிறழ் கூற்றுக்களையும் அவை மொத்தமாக கணக்காய்வு அபிப்பிராயத்தில் ஏற்படுத்தக்கூடிய தாக்கத்தையும் நிர்வாகத்துடன் கலந்துரையாட வேண்டும்.

ஆகவே, கணக்காய்வாளர் முகாமையை பிறழ் கூற்றுக்களை திருத்துமாறு கோர வேண்டும். நிதி அறிக்கைகளில் தேவையான சீராக்கங்களையும் வெளிப்படுத்தல்களையும் செய்ய முகாமை உடன்பட்டாலும், கணக்காய்வாளர் மேலதிக கணக்காய்வு செயல்முறைகளை மேற்கொண்டு செய்யப்பட்ட சீராக்கங்கள் மற்றும் வெளிப்படுத்தல்கள் பொருத்தமானதா என்பதைக் கண்டறிய வேண்டும்.

*(06 புள்ளிகள்)*

*(மொத்தம் 25 புள்ளிகள்)*

## *வினா 09 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள் :*

1. கடனுக்கான நேரடி உறுதிப்படுத்தல்: வங்கி என்பது ஒரு வெளித் தரப்பினர் கணக்காய்வாளர் உறுதிப்படுத்தலை நேரடியாகப் பெற்றுள்ளார். கணக்காய்வாளர் வெளிப்புற ஆதாரங்களில் இருந்து பெறும் சான்றுகள் நம்பகமானவை, மேலும் நேரடியாகப் பெற்ற ஆதாரங்கள் அதிக நம்பகமானவை. ஆகவே, கடனின் உறுதிப்படுத்தலின் நம்பகத்தன்மை உயரும்.
2. மூலதனச் செலவுக்கான முகாமைப் பிரதிநிதிதத்துவம் : முகாமை முகாமைப் பிரதிநிதித்துவத்தை தயாரிக்கிறது. இது உள்வாரியாக உருவாக்கப்படும் ஒரு ஆவணம் ஆகும். எனவே, இது எழுதப்பட்ட மற்றும் கையொப்பமிட்ட ஆவணமாக இருந்தாலும், அதன் நம்பகத்தன்மை ஒப்பீட்டளவில் குறைவாக இருக்கும்.

3. பாதுகாப்பு அதிகாரியின் வாய்மொழி மூல உறுதிப்படுத்தல்: பாதுகாப்பு அதிகாரியின் வாய்மொழி மூல உறுதிப்படுத்தலின் நம்பகத்தன்மை ஒப்பீட்டளவில் குறைவாக இருக்கும்.

*(06 புள்ளிகள்)*

**(b)**

ரங்கா NW நிறுவனத்திற்கு கடன் நிலுவைத் தொகையை நேரடியாக உறுதிப்படுத்துமாறு கோரியுள்ளார். கணக்காய்வாளர் நேரடியாகப் பெற்ற கணக்காய்வு ஆதாரங்கள் மறைமுகமாவோ அல்லது இன்னொருவர் ஊடாகவோ பெற்று கொள்ளும் ஆதாரங்களைவிட நம்பகமானதாகும்.

ஆகவே, கணக்காய்வாளர் நேரடியாக வங்கியிடம் கடன் நிலுவைத் தொகையை உறுதிப்படுத்துமாறு அழைப்பு விடுத்து, வங்கி உறுதிப்படுத்தல்களை கணக்காய்வாளர் முகவரிக்கு நேரடியாக அனுப்பும்படி கேட்க வேண்டும். பதில் வராவிட்டால், கணக்காய்வாளர் செயல்முறையை சரியாக பின் தொடர்ந்து மேலதிக உறுதிப்படுத்தல் கோரிக்கைகளை அனுப்ப வேண்டும். *(04 புள்ளிகள்)*



SRI LANKA

**(c)**

NW ஒரு உயர் தொழில்நுட்ப மின்பிறப்பாக்க இறக்குமதி செய்துள்ளது மற்றும் அந்த மின்பிறப்பாக்க இறக்குமதி செய்ய அனுமதி பெற ரூ. 5,000,000.00 சிறப்பு கட்டணத்தை செலுத்தியுள்ளது. அந்த தொகையை பொறியின் கீழ் மூலதனமாக்கி உள்ளது. கணக்காய்வாளர் தொடர்புடைய ஆதாரங்களை கேட்டுள்ளார், ஆனால் NW நிறுவன முகாமை வங்கி கூற்றைத் தவிர வேறெந்த பொருத்தமான மூல ஆவணத்தையும் சமர்ப்பிக்கவில்லை. இருப்பினும் அந்த தொகையை செலவாக இலாப நட்ட கணக்கில் சேர்க்க கணக்காய்வாளர் பரிந்துரைத்துள்ளார், ஆனால் முகாமை கணக்காய்வாளரின் கோரிக்கையை நிராகரித்துள்ளது. ஆகவே, இது முகாமையுடன் கருத்து வேறுபாட்டை ஏற்படுத்தியுள்ளது.

நிறுவனத்தின் பொருண்மை மதிப்பீடு ரூ. 3,456,000.00 ஆகும், இதனால் இந்த கருத்து வேறுபாடு ஒரு முக்கியமான பிறழ் கூற்றாக கருத்தப்படலாம் .

மேற்கூறப்பட்ட காரணிகளை அடிப்படையாகக் கொண்டு கணக்காய்வாளர் தகுதி பெற்ற கணக்காய்வு அபிப்பிராயத்தை Qualified Audit opinion ' ' வெளியிட வேண்டும்.

***(06 புள்ளிகள்)***

**(d)**

- ஒரு வித்தியாசமான வழக்கு அல்லது ஒழுங்குமுறை நடவடிக்கையின் நிச்சயமற்ற எதிர்கால முடிவு .
- நிதி அறிக்கையின் திகதி மற்றும் கணக்காய்வாளர் அறிக்கையின் திகதிக்கும் இடையே இடம்பெற்ற முக்கியமான நிகழ்வு.
- நிதி அறிக்கைகளில் முக்கியமான தாக்கத்தை ஏற்படுத்த கூடிய புதிய கணக்கியல் நியமத்தை முன்கூட்டியே அமுல்படுத்துதல் (அதற்கு அனுமதி அளிக்கப்பட்டால்)
- நிறுவனத்தின் நிதி நிலைமை மீது முக்கியமான தாக்கத்தை ஏற்படுத்திய அல்லது தொடரக் கூடிய ஒரு பெரிய பேரழிவு.

***(04 புள்ளிகள்)***

**(B)**

- நிறுவனத்தின் ஆறு கடன் தவணைகள் நிலுவையில் உள்ளன.
- நிலுவையில் உள்ள சட்ட நடவடிக்கை.
- எதிர்மறையான நிதி விகிதங்கள்.
- முகாமை குழுவில் இருந்து இரு நபர்கள் பதிலீடு இன்றி பதவி விலகியுள்ளனர்.
- நிறுவனத்தின் தொடர்ச்சியான செயல்பாட்டு நட்டம் .

***(05 புள்ளிகள்)***

***(மொத்தம் 25 புள்ளிகள்)***

*பகுதி C முடிவு*

***Notice:***

These answers complied and issued by the Education and Training Division of AAT Sri Lanka constitute part and parcel of study material for AAT students.

These should be understood as Suggested Answers to question set at AAT Examinations and should not be construed as the "Only" answers, or, for that matter even as "Model Answers". The fundamental objective of this publication is to add completeness to its series of study texts, designs especially for the benefit of those students who are engaged in self-studies. These are intended to assist them with the exploration of the relevant subject matter and further enhance their understanding as well as stay relevant in the art of answering questions at examination level.

*© 2021 by the Association of Accounting Technicians of Sri Lanka (AAT Sri Lanka). All rights reserved. No part of this document may be reproduced or transmitted in any form or by any means, electronic, mechanical, photocopying, recording or otherwise without prior written permission of the Association of Accounting Technicians of Sri Lanka (AAT Sri Lanka)*